





Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2025.11.24 16:2?:?6

# நகர் ஊரமைப்புத்துறை(DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்

## வடுகபாளையம் புதூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், வடுகபாளையம் கிராமம் (ம) வடுகபாளையம்புதூர் ஊராட்சி, க.ச.எண்.82/3B1 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

(திட்டமில்லாத பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : 65JOM061 நாள் : 04.03.2025 அளவு : (1:500) வ

**குறிப்பு :**

மனைப்பிரிவின் பரப்பு : 1.50 ஏக்கர் (அ) 6090.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 34 மனைகள்

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை

**பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை)**

II.மனைப்பிரிவு சாலை பரப்பு : 1887.88 ச.மீ

II. பூங்கா :

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (6090-1887.88 ) x ( 10/100) = 420.21 ச.மீ

**10.0% பூங்கா பரப்பான 420.21 ச.மீ பரப்பளவிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை ரூ. 13,78,289/- நாள். 07.08.2025 அன்று அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.**

iii) பொது உபயோகம்

A)LOCAL BODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (6090-1887.88) x ( 0.5/100) =21.01 ச.மீ

ஒதுக்கப்பட்ட பரப்பு : 21.67 ச.மீ (0.52%)

B)TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (6090-1887.88) x ( 0.5/100) =21.01 ச.மீ

ஒதுக்கப்பட்ட பரப்பு : 23.25 ச.மீ (0.55%)

**கட்டிட வரம்பு:**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019,மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் LOCAL BODY ஒதுக்கீட்டினை உள்ளாட்சியும் மற்றும் TANGEDCO ஒதுகீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சியும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் .
2. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி, மேல்நிலை தொட்டி,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நிலஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும்,எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைஉட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்விதமுன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை (அ) துணை இயக்குநர்(பொ) திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" x 4'0" அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

**SWP / DTCP / TIRUPUR/ LAYOUT APPROVAL NO : 204 /2025**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.